
மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை.

# சூழல் சுடர்

ஐப்பசி - 1993 ★ "மன்று", 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு. ★ 10



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்கப்படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக்கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒருமுறை விரிக்கிறது.

படைப்புக்களில் நான் ஏழை - எனை
அழிக்கும் நீயோ படுகோழை
மனங்கொண்டு எனை வளர்த்தால்
மனிதா................!
உனக்கு வாராதோ சுகவாழ்க்கை
இனிதாய்..... .........?

## விருட்ச விருத்தியின் பங்காளிகள்...

— யோ. இ. கிறிஸ்ரோபர் —

மக்களையும் மிருகங்களையும் போன்று மரங்களும் சுவாத்தியமாகச் செழித்து வளருவதற்கு உணவும் ஊட்டச்சத்துக்களும் அவசியம். நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் என்பன விசேடமாக இம்மரங்கள் செழித்து வளர உதவுகின்றன. அதே வேளையில் கல்சியம், மக்னீசியம், இரும்பு, சல்பர் ஆகிய சத்துணவுகளும் போறியம், மொலிக்னம், நாகம், செம்பு, குளோறைட் போன்ற மூலகங்களும் அவசியமாகின்றன.

இவை எவ்வாறாயினும், விவசாயிகளும், வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களும் செயற்கை உரப் பாவனையிலே கூடிய சிரத்தை காட்டுகின்றனர். செயற்கை உரம் நைதரசன், பொஸ்பரஸ், பொட்டாசியம் ஆகிய மூன்றை மட்டுமே கொடுக்கின்றன. அத்துடன் பயிரை வளர்க்கும் தாயாகிய மண் சேதன சத்துக்களின்றி வளமற்ற மணலாக மாறுகின்றது.

மாட்டெரு, ஆட்டெரு, கூட்டெரு போன்ற சேதனப் பசளைப் பாவனை மண்ணில் பயிருக்குத் தேவையான உணவு, ஊட்டச்சத்துக்கள், மூலகங்கள் யாவற்றையும் கொடுப்பது மாத்திரமன்றி மண்ணில் பயிரின் வளர்ச்சிக்கு உதவும் நுண்ணங்கிகளான பற்றீரியாக்கள், பங்கசுகளின் வளர்ச்சிக்கும், அவைகளின் இயக்கத்திற்கும் உதவுகின்றன. இந்நுண்ணங்கிகள் மரங்கள் பயிர்களின் சுவாத்தியமான விருத்திக்கு மிகமிக உதவுகின்றன. எவ்வாறெனில், நைதரசன் வளியில் கலந்து இருக்கின்றது. மண்ணில் பொஸ்பரஸ் செறிந்துள்ளது. ஆனால் நுண்ணங்கித் தாக்கம் இன்றி இவை பயிர்களுக்குப் பயனற்ற நிலையிலேயே உள்ளன. இதைவிட முக்கிய விடயம் என்னவென்றால் மரங்களும், நுண்ணங்கிகளும் ஒருவருக்கொருவர் உணவைப் பரிமாறிக் கொள்வார்கள். இது எவ்விதமென்று எண்ணத் தோன்றலாம். நுண்ணங்கிகள் வளியிலுள்ள நைதரசனையும், மண்ணிலுள்ள பொஸ்பரசையும் இயற்கைத் தாக்கத்தின்மூலம் மரங்கள் உணவாக்கக்கூடிய முறையில் மாற்றிக்கொடுக்கின்றன. சேதனமயமாக்கலின்போது தமக்குத் தேவையான உணவைப் பங்கசுக்களும், பற்றீரியாக்களும் எடுத்துக் கொள்கின்றன.

இவ்விருவழிப் பிணைப்பு இவர்களை இயற்கையின் பங்காளிகள் ஆக்குகின்றன. அதே வேளையில் இவர்கள், விவசாயியின் தோழனாகவுமாகிறார்கள். விஞ்ஞான அபிவிருத்தி இயற்கையை செயற்கை சக்திகளின் மூலம் துரித முன்னேற்றத்தைக் கொடுத்த போதிலும் இயற்கை நியதிகளை நோக்கும்பொழுது இச் செயற்கை முறை ஒரு தற்காலிகமானதொன்று என ஆணித்தரமாகக் கூறக்கூடியதாக இருக்கின்றது. ✲

**பசுந்தாட் பசளை - பாரைப்
பசுமையடயப் பண்ணும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமாநகரில் மாபெரும் சூழல் கலைநிகழ்ச்சிகள் - கண்ணோட்டம்

உலக சூழல் தினப் போட்டி நிகழ்ச்சிகள் - 1993 யூன் 5.

# நாடகம், வில்லிசை, நாட்டுக் கூத்துப் போட்டிகள்

திருமதி நிர்மலா ஜெயராஜா, சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்.

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

**12-09-93 – மண்முனை வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலைகள்

1. மட்/புனித மைக்கல் கல்லூரி
2. மட்/புனித சிசிலியா மகளிர் ம. வி.
3. மட்/சிவானந்தா வித்தியாலயம்
4. மட்/அமிர்தகழி ஸ்ரீ சித்தி விநாயகர் வி.
5. மட்/ஆனைப்பந்தி இ. கி. மி. ம. ம. வி.

வில்லிசை

1ம் இடம் – மட்/சிவானந்தா வித்தியாலயம்
2ம் இடம் – மட்/புனித மைக்கல் கல்லூரி
3ம் இடம் – மட்/புனித சிசிலியா ம. ம. வி.
4ம் இடம் – மட்/ஆனைப்பந்தி இ. கி. மி.
5ம் இடம் – மட்/அமிர்தகழி ஸ்ரீ சி. வி. வி.

நாடகம்

1ம் இடம் – சிவானந்தா வித்தியாலயம்

**14-09-93 – ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலைகள்

1. மட்/செங்கலடி மகா வித்தியாலயம்
2. மட்/தன்னாமுனை புனித வளனார் வி.

வில்லிசை

1ம் இடம் – மட்/தன்னாமுனை புனித வ. வி.
2ம் இடம் – மட்/செங்கலடி மகா வி.

நாடகம்

1ம் இடம் – மட்/செங்கலடி மகா வி.

**15-09-93 – போரதீவுப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலை

1. மட்/முனைத்தீவு சக்தி வித்தியாலயம்

வில்லிசை, நாடகம்

1ம் இடம் – மட்/முனைத்தீவு சக்தி வி.

**17-09-93 – மண்முனைப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலைகள்

1. மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம்
2. மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வி.

நாடகம்

1ம் இடம் – மட்/ஆரையம்பதி மகா வி.
2ம் இடம் – மட்/தாழங்குடா ஸ்ரீ வி. வி.

**18-09-93 – கோறளைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலை

1. மட்/சந்திவெளி சித்தி விநாயகர் வி.

நாடகம்

1ம் இடம் – மட்/சந்திவெளி சித்தி வி. வி.

**18-09-93 – கோறளைப்பற்று வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவு**

பங்குபற்றிய பாடசாலை

1. மட்/கதிரவெளி விக்னேஸ்வரா ம. வி.

வில்லிசை

1ம் இடம் – மட்/கதிரவெளி வி. ம. வி.

நாட்டுக்கூத்துக்கள் எதுவும் பங்குபற்றவில்லை.

மாவட்ட மட்டப்போட்டி 18-09-93 ஆந் திகதி மட்/அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இடம் பெற்றது. முடிவுகள் கீழே குறிப்பிடப்படுகின்றன.

நாடகம்

1ம் இடம் – மட்/முனைத்தீவு சக்தி வி.
2ம் இடம் – மட்/பட்டிருப்பு மத்திய ம. வி.
3ம் இடம் – மட்/செங்கலடி மகா வி.
4ம் இடம் – மட்/ஆரையம்பதி மகா வி.

வில்லிசை

1ம் இடம் – மட்/சிவானந்தா வித்தியாலயம்
2ம் இடம் – மட்/முனைத்தீவு சக்தி வி.
3ம் இடம் – மட்/கதிரவெளி வி. ம. வி.
4ம் இடம் – மட்/தன்னாமுனை புனித வ. வி.

பிரதேசச் செயலக மட்டப் போட்டிகளிலும் மாவட்ட மட்டப் போட்டிகளிலும் வில்லிசை, நாடகம் ஆகிய நிகழ்ச்சிகளில் மாணவர்கள் அனை

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## சூழலை நாம் பேண
## மழையே நீ பொழிந்திடப்பார்

அடங்கிய அலைகளுடன் ஆற்றினைப் பார்!
அல்லிகள் கருகிடும் நிலையினைப் பார்!
அசைவினை மறந்து மரங்களும் செடிகளும்
அண்ணாந்து ஏங்கும் கொடுமையைப் பார்.

இன்பமில்லா வெடிப்புடன் விளைநிலம் பார்
இன்பமான இரவிலும் பேக்கரி அனலைப்பார்!
இலைகளும் உதிர்ந்திட இளம் தளிர் கருகிட
இன்னல்கள் தோய்ந்த இளம் செடியினைப்பார்.

உக்கிரம் தாங்கா உயிரினம் பார்!
உக்கிரம் தாங்கா இயற்கை அன்னையைப்பார்!
உன்வரவால் உக்கிய உளமே தளிர்த்திட
உளமகிழ்ச்சியாய் உனைப்பார்க்கும் உழவனைப் பார்.

காடும் வீடும் சனிவுடன் தேடிய
கார்மேகமே இன்றுதான் வருகிறாய் நீ
கண்ணும்மனமும் குளுமையாய் நிறைந்து மகிழ்ந்திட
கடிதென மழையைப் பொழிந்திடப் பார்.

தவளைகள் மேளமும் தாளமும் தட்டுதுபார்!
தள்ளாடி மயில்களும் ஆடுது பார்!
தடார்! தடாரென மின்னி முழங்கிட
தடையின்றி தரைவந்து சேர்வாயே நீ.

ஆக்கம்: மு. கலைமோகன்
சித்தாண்டி பொதுஜன அ. ம.

## வனப்பாதுகாப்பு

சுற்றாடல் பாதுகாப்போம்
சூழலை நாம் மதித்திடுவோம்
கற்றோரும் மற்றோருமாய்
காட்டுக்கு அரணாய் நிற்போம்.

இயற்கையை இறைவனென்போம்
இலைதழை காத்து நிற்போம்
செயற்கையால் நிறைவேயில்லை
செடிக் கிளை இல்லை, இல்லை.

காடுகள் அழிந்ததாலே
கடுங்கோபம் கொண்டாள் தேவி
மூடியே திறப்பதற்குள்
மூண்டதே பூமியதிர்ச்சி.

கானகை கண்ணீர் சிந்தி
கவலையால் வெந்து நெஞ்சம்
ஆனதால் வந்த வெள்ளம்
அகிலத்தை அழித்த கோலம்

இயற்கையைச் சமச்சீராக்கி
இவ்வகிலத்தை வாழ வைக்கும்
உயர் அரண் வனங்கள் தாமே
உயிரைப் போல் பாதுகாப்போம்.

ஆக்கம்: சிறின் சுறாயா முகம்மது
அல்-முனிரா பா. ம. வி.
ஆண்டு - 11

## உயர்ச்சிப் பாதையில் மன்று

லியாத், அஷ்ரப், (சூழல் சுடர் ஆசிரியர் குழு. மட்/அல்ஹிரா வி., காத்தான்குடி.)

சூழலைப் பார்க்கவே யாருமில்லை
பாதுகாக்க நடவடிக்கை ஏதுமில்லை
அன்றைய சமூகமோ பெரிதாய் நினைக்கவில்லை
தாற்பரியம் என்னவென்று தெரியவில்லை.

மட்டுநகர் பதிதனைக் காப்பதற்காய்
எழுச்சியுடன் எழுந்ததே எம் மன்று
பாதுகாக்க பல வழி செய்வதற்காய்
உயர் அறிவை வழங்குதே இம்மன்று.

பரவலாக சூழலறிவைப் பரப்புவதே என்று
சூழற்சுடர் மாசிகையை வெளியிடுகிறதே இன்று
மாணவர்கள் சூழல்தனைப் பேணிடவே
மலர்வுடன் பொதுக்கூட்டம் நடத்துதுவே மன்று.

சமூகத்தின் நன்மைக்காய் உழைத்திடும் மன்றே
பல்லாண்டு பாரினில் சிறப்பினைப் பெற்று
உலக மக்களின் அன்பினைப் பெற
எம் இதய வாழ்த்துக்கள் என்றுமே உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

திரு. கு. சண்முகம் (ஆசிரியர்), மட் / களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம்.

## பப்பாசிப் பழச் செய்கை

(சென்ற இதழ்த் தொடர்ச்சி...)

விதை முளைத்து 20 ச. மீ. (8 அங்.) உயரம் வளர்ந்தபின்பு தோட்டத்தில் நடலாம். பொதுவாக மழை ஆரம்பிக்கும் காலத்தில் நடுவது பொருத்தமானதாகும்.

### பூத்தலும் காய்த்தலும் :

இவ்விதைகள் ஆண் மரங்களையும், பெண் மரங்களையும், இருவகைப் பூக்களையும் உற்பத்தி செய்கின்ற மரங்களையும் உருவாக்குகின்றது. ஆண் மரங்கள் காய்ப்பதில்லை. பெண் மரங்களிலுள்ள பூக்கள் அருகிலுள்ள ஆண்மரங்கள் அல்லது இருபால்மரங்களினால் மகரந்தச் சேர்க்கையினை அடைந்தால் மட்டுமே காய்க்கும்.

பப்பாசி மரங்கள் 4 – 6 மாத வயதையடைந்ததும் பூக்கத்தொடங்குகின்றன. அப்போது இனங்கண்டு, ஒவ்வொரு குழியிலும் ஒரு பெண் அல்லது இருபால் மரத்தை மட்டும் விட்டு ஏனையவற்றை அகற்றிவிடுக. இவ்வாறு அகற்றுகையில் பெண் தாவரம் மட்டும் காணப்பட்டால் 50 பெண்மரங்களுக்கு ஒரு ஆண் பப்பாசி மரம் இருக்கும்படி விட்டு ஏனைய ஆண் மரங்களை அகற்றிவிடுக.

### களைக்கட்டுப்பாடு :

தாவரங்களைச் சுற்றியுள்ள களைகளை மண்ணைக் குழப்பாது அகற்றவேண்டும். களைகளை நிலமட்டத்திற்கு மேலாக வெட்டியகற்றலாம். வெட்டிய களைகளைத் தாவரங்களைச் சுற்றி மூடுபடையாக இடுவதன்மூலம் களை வளத்தைக் கட்டுப்படுத்தலாம்.

### பசளையிடுதல் :

பின்வரும் பசளைகளை ஒவ்வொரு மரத்திற்கும் இடவேண்டும். மர அடியிலிருந்து சிறிது தூரத்தில் (1 அடி) மரத்தைச் சுற்றித் தூவி மண்ணுடன் கலந்துவிடவேண்டும். பசளையிடும்போது மண் ஈரமாக இருக்கவேண்டும்.

கீழே குறிப்பிடப்படும் பசளைகளை நடும்போது நடுகைக் குழிக்கும் நட்டு இரண்டு மாதத்திலும், நட்டு ஆறு மாதத்திலும் அதன்பின்பு 3 மாதங்களுக்கொரு தடவையும் ஒவ்வொரு தடவையிலும் ஒவ்வொரு மரத்திற்கும் இடவேண்டும்.

உலர் இடைவலயம் (மட்டக்களப்பு மாவட்டம்)

| | | |
|---|---|---|
| யூறியா | — | 60 கிராம் |
| செறிந்த சுப்பர் பொசுபேற்று | — | 40 கிராம் |
| மியுறியேற்றுப் பொட்டாசு | — | 125 கிராம் |

நோய்ப் பீடைகள் :

அடி அழுகல் :

இந்நோய் மண்ணிலுள்ள பங்கசு ஒன்றினால் ஏற்படுத்தப்படுகின்றது. அதிகமான நாற்றுக்களே பாதிக்கப்படுகின்றது. இந்நோய் ஏற்பட்டால் நாற்றுக்களின் அடியழுகி மஞ்சள் நிறமடைவதுடன் இலைகளும் மஞ்சள் நிறமடைந்து நாற்றுக்கள் இறந்துவிடுகின்றன. தாவரங்களைச்சுற்றி நீர் தேங்கி நிற்காது கான்கள் வெட்டி மேலதிகமாயிருக்கும் நீரை அகற்றியும், தாவர அடியினைச் சுற்றி இதற்குரிய கிருமிநாசினியைப் பாவித்தும் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

### பழம், தண்டு அழுகல் :

இந்நோய் 'பைற்றொப்தரா' என்னும் பங்கசுவினால் ஏற்படுத்தப்படுகின்றது. பழக்காம்பு முதலில் அழுகத்தொடங்கி பின் பழங்கள் முற்றாகவே அழுகிவிடுகின்றன. இதற்குரிய கிருமிநாசினியினை விசிறி இதனைக் கட்டுப்படுத்தலாம்.

### சித்திர வடிவ வைரசு நோய் :

இந்நோயை ஏற்படுத்துகின்ற வைரசுக்கள் பனிப் பூச்சிகள் எனப்படும் மிகச்சிறிய பூச்சிகளினால் பரப்பப்படுகின்றன.

இலைகள் மஞ்சள் நிறமடைந்து சுருங்கித் தாவர நுனியில் அதிகம் இலைகள் தோன்றுவது போன்று காணப்படும். இந்நோய் தொடரும்போது மரத்தின் வளர்ச்சி குன்றி உருமாற்றமடைந்து பழங்கள் உருவாகும்.

நோயுற்ற தாவரத்தைப் பிடுங்கி எரித்துவிடுவதோடு; தோட்டத்தைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். ஒழுங்காகப் பசளையிடுதல், நீர்ப்பாய்ச்சுதல் என்பவற்றாலும் பனிப்பூச்சிகள் போன்றவற்றைப் பூச்சிநாசினி விசிறிக் கட்டுப்படுத்துவதாலும் இந்நோயை ஓரளவு தடுக்கலாம்.

### அறுவடை :

நாற்றுக்களை நட்டு 4 – 6 மாதங்களில் பழங்களைப் பெறலாம். எனினும் தொடர்ச்சியாகப்

[5ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டு மாநகரில் மாபெரும் சூழல் கலைநிகழ்ச்சிகள்...

2ஆம் பக்கத் தொடர் ..

வருமே மிகத் திறமையுடன் செயற்பட்டார்கள். வில்லிசை கருத்தும் இசையும் நிறைந்து மிகவும் வியத்தகு முறையில் சாதனைகளைப் படைத்ததையும் நடுவர்கள் வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுப்பதில் திணறிக்கொண்டிருந்ததையும் அவதானிக்க முடிந்தது. நாடகங்களில் புதிய யுக்திகள், மேடையமைப்புகள் என்பன திறம்படக் கையாளப்பட்டது. மாணவர்களைவிட பயிற்சியளித்த ஆசிரியர்களும் ஆசிரியைகளும் மிகவும் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். சகல பாடசாலைகளும் திறமையுடன் நிகழ்ச்சிகளை முன்வைத்தபோதும், போட்டி முடிவுகளைக் கேட்ட பின்னரும் அவற்றை அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் ஏற்றுக்கொண்டது அவர்களது பெருந்தன்மையைக் காட்டியது. சூழல் தினத்தில் மாபெரும் புரட்சியொன்றைப் படைத்தனர் மாணவர்கள்.

**20-09-93**ல் இறுதி நிகழ்ச்சியான பரிசளிப்பு வைபவமும் மாவட்டத்தில் 1வதாக வெற்றிபெற்ற பாடசாலைகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. அரசாங்க அதிபர் திரு. ஆர். மோனகுருசாமி அவர்கள் பிரதம அதிதியாக சமூகமளித்திருந்தார். சிறப்பு விருந்தினராக மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் சார்பாக திருமதி. சுபா சக்ரவர்த்தி கலந்து கொண்டார். மாவட்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. நடராஜா வரவேற்புரை ஆற்றினார். அடுத்து, பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளரும் மாவட்ட சூழல் முகவரவைச் செயலாளருமான திரு. செ. புண்ணியமூர்த்தி அவர்களும், மன்று நிறுவனப் பிரதித்தலைவர் திரு. மனோ இராஜசிங்கம் அவர்களும் தலைமையுரை நிகழ்த்தினர். அதனைத்தொடர்ந்து பிரதம அதிதி உரையும் சிறப்பு விருந்தினர் உரையும், கலைநிகழ்ச்சிகளும் நடந்தேறின. பரிசளிப்பு விழாவில் பணப்பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இவற்றை திருமதி. சுபா. சக்ரவர்த்தி, காணி ஆணையாளர் திரு. குருநாதன், திரு. சிவபாக்கியராசா, திரு. நடராஜா, திரு. செ. புண்ணியமூர்த்தி, திரு. மனோ இராஜசிங்கம் ஆகியோர் வழங்கினார்கள். விழாவிற்கு வருகை தந்திருந்த கிராமோதய சபைத்தலைவர்களும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

விழாவிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள், கிராமோதய சபைத்தலைவர்கள், உள்ளூர்த்திணைக்களத் தலைவர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள், குடும்பத்தலைவிகள் எனப் பல திறத்தாரும் சமுகம் அளித்திருந்தனர். திருமதி. நிர்மலா ஜெயராஜாவின் நன்றியுரையுடன் விழா இனிது நிறைவுற்றது.

இவ்விழாவினை வெற்றிகரமாக நடத்துவதற்கு உதவியவர்களும் நன்றிக்குரியவர்களும்,

திரு. செ. புண்ணியமூர்த்தி,
பிரா. உ. உ. ஆணையாளரும், மாவட்ட சூ. மு. செயலாளரும்.

திரு. யோ. இ. கிறிஸ்ரோபர்,
மன்று நிறுவன இணைப்பாளர்,
சகல ஒழுங்குகளுக்கும்.

திரு. காசுபதி நடராஜா, நெறிப்படுத்தியவர்.

திரு. க. முத்துலிங்கம்,
பிராந்திய கல்விப்பணிப்பாளர்.

திரு. வி. முருகமூர்த்தி
திரு. எம். பற்பராஜா
திருமதி இ. விமல்ராஜ்
} சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.

பிரிவு மட்டக் கல்வியதிகாரிகள்,
பாடசாலை அதிபர்கள்,
அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர், உப அதிபர், துணை ஆசிரியர்கள்,
நடுவர்களாகக் கடமைபுரிந்தவர்கள்,
மன்று நிறுவன உத்தியோகத்தர்கள்.

சூழல் கருத்துக்கள் வில்லிசையாகவும், நாடகமாகவும் பரிணமித்து பாடசாலைச் சிறார்களின் சிந்தையிலும், மாநகரில் பல அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுமக்களிடையே எழுச்சியையும் சிந்தனையையும் தூண்டியுள்ளது என்ற வகையிலும் இந்நிகழ்ச்சி ஒரு பயனுள்ள நிகழ்ச்சியாகியுள்ளது என்பதில் ஐயமில்லை. குறைந்தது 5 வீதமானவர்களாவது சூழலைப் பற்றி சிந்தித்திருந்தமை சூழல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய திருப்தியை ஒழுங்கு படுத்தியவர்களுக்கு ஏற்படுத்திற்று. சிறுவர்கள் ஆர்வத்துடனும், திறமையுடனும் மாத்திரமல்ல முழுவதிலும் மிக அழகாக சூழல் பற்றிய புதிய புதிய கருத்துக்களை முன் வைத்தார்கள்.

எதிர்கால சந்ததியினர், சூழல் அறிவினை உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையினை இந்நிகழ்ச்சி மூலம் எமக்கு ஊட்டியது நிறைவைத் தந்தது.

## பப்பாசிப் பழச் செய்கை:

[4ம் பக்கத் தொடர்ச்சி]

பழங்களைப் பெற 10 – 12 மாதங்கள் செல்லும். பழங்களின் நுனி மஞ்சள் நிறமடைந்ததும் பழங்களைப் பிடுங்கலாம். ஒரு மரத்திலிருந்து ஒரு வருடத்தில் 40 – 50 பழங்களை விளைவாகப் பப்பாசி மரமொன்றிலிருந்து மூன்று வருடங்களுக்கே பழங்களைப் பெறலாம். அதன்பின்பு பழங்கள் சிறியதாகிவிடுவதோடு மரங்கள் உயரமாக வளர்ந்துவிடும். அதனால், பழங்களைப் பிடுங்குவது கடினம். எனவே, இக்காலம் வருவதற்கு முன்பே புதிய தாவரங்களை நடவேண்டும்.

எனவே, குறுகிய காலத்தில் நிறைந்த பயனைத் தரக்கூடிய பப்பாசியினைப் பயிர்செய்து பயன்பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்புகள்

★ திருமதி வி. இராமச்சந்திரா (ஆசிரியை),
மட/குருமண்வெளி சிவசக்தி வித்தியாலயம்,
குருமண்வெளி.

''சூழற் சுடர்'' சஞ்சிகை கிடைக்கப்பெற்றது. பெருமகிழ்ச்சியடைந்தோம். மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் ''மன்று'' நிறுவனத்திற்கு எமது பாடசாலையின் சார்பில் நன்றியைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

★ செல்வன். எம். கே எம் பாரீஸ்,
மட்/ஓட்டமாவடி முஸ்லிம் மகா வி.,
ஓட்டமாவடி, வாழைச்சேனை.

நான் உங்களுடைய சூழற் சுடர் சஞ்சிகையை எனது நண்பன் அப்துல் காதர் என்பவரிடம் இருந்து பெற்று வாசித்தேன். நான் இதனைத் தொடர்ந்தும் வாசிக்க விரும்புகின்றேன். எனவே, சூழற் சுடர் புத்தகத்தை எனக்கும் அனுப்பி வைக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

★ திரு. தி. நாகேஸ்வரன்,
பிரா. உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
வவுனியா.

தங்களால் அரச அதிபருக்கு முகவரியிடப்பட்ட புரட்டாதி மாத சூழல் சுடர் இதழை இன்று கண்ணுற்றேன். ஓர் அருமையான படைப்பு. நல்ல பல கருத்துக்களைக் கொண்டுவருகின்ற இவ்விதழின் பிரதி ஒன்றை மாதாமாதம் எமக்குக் கிட்டச்செய்வீர்களாயின் நன்றியுடையவனாவேன்.

தங்களால் வெளியிடப்பட்ட இதற்கு முந்திய பிரதிகளையும் எமக்கு அனுப்புவீர்களாயின் எமது மாவட்ட சூழல் நூலகத்தில் ஓர் நூலாக பேணுவதற்கு உதவும் என்பதால் அவற்றையும் அனுப்பி வைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

★ திரு த. தாமோதரம்,
திட்ட இணைப்பாளர், சரீரம்,
களுவாஞ்சிக்குடி.

இம்மாத ''சூழல் சுடர்'' கிடைக்கப்பெற்றேன். கற்றேன், களிகொண்டேன். மாவட்ட ரீதியாக விழிப்பு ஏற்படுத்தவேண்டிய நிகழ்ச்சிகள் எத்தனையோ இருக்கிறது. அந்தவகையில் 'சூழல்' விழிப்புணர்ச்சி ஒன்றினை செயல் பாடு மூலமாகவும், 'சூழல்சுடர்' பத்திரிகை மூலமாகவும் புதுப்பொலிவுடனும் புதுப்புது ஆக்கங்களுடனும் வளர்ந்திட, வாழ்ந்திட நல்ல தமிழ் வணக்கங்கள் என்றும் உரித்தாக வேண்டுகின்றேன்.

## உங்கள் கவனத்திற்கு:

''சூழல் சுடர்'' ஒரு மாதாந்த வெளியீடு. இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

"சூழல் சுடர்",
மனறு,
16, புனித மிக்கேல் வீதி,
மட்டக்களப்பு.



பத்து எயர்கொண்டிஷன் சாதனங்கள் நாள் முழுதுந் தொடர்ந்து இயங்கி வெளிப்படுத்தும் குளிர்ச்சியைத் தனி மரமொன்று தன் நிழலால் தந்துதவுகிறது.

ஆதாரம்:
மில்க் வைற் வெளியீடு.

## வெளியீட்டுக் குழு

**சுடரின் தூண்டுகோல்:**

மனோ இராஜசிங்கம்
யோ. இ. கிறிஸ்ரோபர் — மன்று

**நெறிப்படுத்துனர் குழு:**

அ. யோகராணி
க. லீலா
கு. வெற்றிவடிவேல் — மன்று

**ஆசிரியர் குழு:**

த. மதிவண்ணன் – வந்தாறுமூலை கி. அ. ச.
பூ. சுந்தரலிங்கம் – பொது ஜன அ. ம.
வி. முரளிதரன் – செங்கலடி ம. வி.
லெ. முகம்மது அஸ்ரப் – அல்–ஹிரா வி.
பி. சந்திரவதி – உழைக்கும் ம. அ. நி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழல் மாசடைதல்

(வி. யோகம், ஆண்டு 9, மட்/ஆறுமுகத்தான் குடியிருப்பு கலைமகள் வித்தியாலயம்)

சூழல் எனும்போது அதில், நாமும் நம்மைச் சூழவுள்ள பௌதிக கலாச்சார அம்சங்களும் அடங்கும். மேற்கூறப்பட்ட பௌதிகச் சூழலானது மனிதனின் பல்வேறுபட்ட செயற்பாடுகளால் மாசடைகின்றது. நிலம், நீர், வளி என பௌதிகச் சூழலை மூன்றாகப் பாகுபடுத்தலாம். பல்வேறுபட்ட காரணங்களினால் இந்தப் பௌதிக அம்சங்கள் அசுத்தமடைகின்றன.

நவீன தொழில்நுட்பச் சாதனங்களின் உற்பத்தியும் அவற்றின் பிரயோகமும், போர் ஆயுதங்களைக் கண்டுபிடித்தல், அவற்றைப் பிரயோகித்தல், அதனைப் பரீட்சித்துப் பார்த்தல் ஆகியவற்றின் காரணமாகவும் நவீன தொழில்நுட்பச் சாதனங்களை மனிதன் தனது பல்வேறுபட்ட தேவைகளுக்காகப் பயன்படுத்தும் வேளையிலும், அவற்றின் கழிவுப்பொருட்களினாலும் நிலம், நீர், வளி என்பன மாசடைகின்றன.

எமது மட்டக்களப்புப் பிரதேசத்தின் சூழல் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கலவரங்கள் காரணமாக கிராமப்புறமக்கள் நகர்ப்புறங்களுக்குப் புலம்பெயர்ந்து சென்று அகதிமுகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். அவர்களது அன்றாடப் பாவனைகளின் மூலம் குவிக்கப்படும் கழிவுப்பொருட்கள் காரணமாக மட்டக்களப்பு நகரப் பகுதி நரகம் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாவிக்கு அண்மையில் அனேகமான குப்பை கூழங்கள் குவிக்கப்படுவதாலும், இப்பிரதேச விவசாயிகள் நவீன கிருமிகொல்லி, களைக்கொல்லி என்பவற்றைப் பயிர்ச்செய்கையின்போது பயன்படுத்துவதாலும், இப்பிரதேச மக்கள் தமது வீட்டுக் கழிவுப்பொருட்கள், பாவனையின் பின் எஞ்சும் உணவுக் கொள்கலன்கள் ஆகியவற்றையும் மிருகக் கழிவுகள் என்பவற்றையும் தகுந்த முறையில் அகற்றாமல் கண்டகண்ட இடங்களில் வீசுவதாலும் இப்பிரதேச நிலம் வெகு மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளது.

அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்து செங்கலடிப்பற்றைச் சேர்ந்த தன்னாமுனை தொடக்கம் கொடுவாமடு, தம்பானம்வெளி ஆகிய பிரதேசங்களில் நடைபெறும் நெற்செய்கையில் பாவிக்கப்படும் நவீன கிருமி கொல்லி, களைக்கொல்லி, இரசாயன வளமாக்கிகள் என்பன சிற்றோடைகள், வாய்க்கால்கள் வழியாகச் சென்று மட்டக்களப்பு வாவியை அடைதல், கழிவுப் பொருட்களை அப்பிரதேச ஆற்றில் கொட்டுதல், மிருகங்களைக் குளிப்பாட்டுதல், உழவு இயந்திரம் போன்ற இயந்திரங்களைக் கழுவுதல் ஆகியவற்றினாலும், காலத்திற்குக் காலம் உன்னிச்சை போன்ற குளங்கள் உடைப்பு எடுப்பதனாலும், அவற்றினால் அள்ளப்பட்டுவரும் கழிவுப் பொருட்களினாலும் மட்டக்களப்புப் பிரதேச நீர் நிலை மாசடைந்துள்ளது.

வளியைப் பொறுத்தமட்டில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல் காரணமாக அதிகமான வீடுகள் உடைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன. இவற்றின் பொடிகள் காற்றுடன் கலப்பதனாலும், குப்பை கூழங்கள் அழுகிக் கெட்டமணம் காற்றுடன் கலந்து துர்நாற்றம் வீசுவதாலும் பழைய வாகனங்கள் பாவனையில் உள்ளதனால் அவற்றினால் வெளிவிடப்படும் நச்சுப்புகைகளினாலும் வளி வெகுவாக மாசடைந்துள்ளது. இதனால், இப்பிரதேச மக்கள் கடுமையான முறையில் சுவாசம் சம்பந்தமான நோய்களுக்கு ஆளாகி உள்ளனர்.

ஆகவே, நாம் நோய் நொடிகளின்றி வாழ எமது சுற்றாடலை தூய்மையாக வைத்திருந்து அது மாசடைவதைத் தடுத்து நலம் பெறுவோமாக. ❀

# மண்புழு

மண்புழு விவசாயியின் நண்பன். இதன் எச்சம் பயிர்களுக்கு அதிசிறந்த ஊட்டச்சத்துக்களைக் கொடுக்கின்றது. இதன் எச்சத்தில் நச்சுத்தன்மை இருப்பதனால் மண்புழு மேலே நோக்கியே நகர்கின்றது.

## தெரிந்துகொள்ளவேண்டியவை :

1. ஊதா நிறப் பழங்களையும், மஞ்சள் நிறப் பழங்களையும் விளைவாகத் தரும் கொடித்தோடை வர்க்கங்கள் கலந்து உருவாக்கப்பட்ட கொடித்தோடை வர்க்கம் – **தங்கலைக் கொடித்தோடை.**
2. ஒரு இலை கொண்ட துண்டங்கள்மூலம் இனம் பெருக்கப்படும் பயிர்கள் – **தேயிலை, மிளகு, லெமன்.**
3. உணவிற்காக வளர்க்கப்படும் காளான் வகைகள் – **வைக்கோல் காளான், சிப்பிக்காளான், பட்டன் காளான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

★ எமது புதிய முகவரி: இல. 16, புனித மிக்கேல் வீதி, மட்டக்களப்பு.

★ சமூகக் காடு வளர்ப்பில் பாடசாலைகளும், கழகங்களும், தனிநபர்களும் மிகவும் ஆர்வமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. இதனடிப்படையில் நாற்றுமேடைகள் அமைத்துள்ளோர் விபரம்:

**ஏறாவூர்ப்பற்று, கோறளைப்பற்று :**
மட்/தன்னாமுனை புனித வளனார் வித்தியாலயம், மட்/களுவன்கேணி விவேகானந்தா வித்தியாலயம், மட்/ஏறாவூர் விபுலானந்தா வித்தியாலயம், மட்/மிச் நகர் மகா வித்தியாலயம், மட்/கறுவாக்கேணி கலைமகள் வித்தியாலயம், சித்தாண்டி பொதுஜன அபிவிருத்தி மன்றம், ஐயங்கேணி காந்தி மட்பாண்டச் சங்கம், சந்திவெளி இந்து இளைஞர் மன்றம், சந்திவெளி தடாகம், பிறைந்துறைச்சேனை கிராமோதய சபை, கறுவாக்கேணி கிராமோதய சபை, மற்றும் பதினொரு தனிநபர்கள்.

**மண்முனை வடக்கு :**
மட்/கல்லடி சிவானந்தா வித்தியாலயம், மட்/கல்லடி விபுலானந்தா வித்தியாலயம், மட்/கல்லடி விவேகானந்தா வித்தியாலயம், மட்/கல்லடி புனித தெரேசா வித்தியாலயம், மற்றும் ஒரு தனிநபர்.

**காத்தான்குடி :**
மட்/காத்தான்குடி மத்திய மகா வித்தியாலயம்.

**மண்முனைப்பற்று :**
மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம், மட்/கிரான்குளம் விநாயகர் வித்தியாலயம், மட்/தாழங்குடா ஸ்ரீ விநாயகர் வித்தியாலயம், மட்/காங்கேயனோடை அல்-அக்ஷா வித்தியாலயம், மட்/காங்கேயனோடை இஸ்புல்லா வித்தியாலயம், மட்/ஆரையம்பதி மகா வித்தியாலயம், மட்/பாலமுனை அலிகார் வித்தியாலயம், மற்றும் மூன்று தனிநபர்கள்.

**மண்முனை தென்எருவில்பற்று :**
மட்/களுதாவளை மகா வித்தியாலயம், மட்/செட்டிபாளையம் மகா வித்தியாலயம், மற்றும் தனிநபர் ஒருவர்.

★ சமூகக் காடு வளர்ப்பில் கலந்துகொள்ள விரும்புவோர் உங்கள் பகுதிக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுடன் எமது அலுவலகத்தில் வெள்ளிக்கிழமைகளிலும் மற்றைய நாட்களில் உங்கள் பகுதிகளிலும் தொடர்புகொண்டு மேலதிக விபரங்களைப் பெறமுடியும்.

உத்தியோகத்தர்கள் விபரம் :

| | | |
|---|---|---|
| ஏறாவூர்ப்பற்று, கோறளைப்பற்று | — | திரு. கு. வெற்றிவேல், திரு. உதயகுமார். |
| மண்முனை வடக்கு | — | செல்விகள்: கு. ஜெரீந்தாறோஸ், அ. யோகராணி. |
| காத்தான்குடி, மண்முனைப்பற்று | — | திருமதி கு. கிறிஸ்ரோபர். |
| மண்முனை தென்எருவில்பற்று | — | திருமதி தே. தயாபரன். |

திரு. சண்முகம் (ஆசிரியர்)
களுவன்கேணி

mandru
16, St. Michael's Street,
Batticaloa.
Sri Lanka.

இப்பிரசுரம் மன்று இணைப்பாளர் யோ. இ. கிறிஸ்ரோபரினால் மட்டக்களப்பு செள். ஜோசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Com. by S. Singarajah.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org